Tiaano®
Innovation In Inert Metals

**Ti Anode Fabricators Pvt. Ltd.**
An ISO 9001 : 2008 Certified

Ti Nb
Ir Ta
Ru Pt

#48 Noothanchery, Madambakkam, Chennai – 73, India. Ph: 0091 44 2278 1148 Fax: 22781362 Email: info@tianode.com web: www.tianode.com

“கண்டம் விட்டு கண்டம் தாண்டி நாளை அண்டம் ஆளும் இந்தியா”

## PROGN0STICATION 2010-2011

- **Endeavor** : QUALITY
- **Turnover Target** : 200% ↑
- **Products for …**
  - Consumer Market : 3%
  - Green Environment : 25%
- **Rejection Rate** :100% ↓

## TESTIMONIALS

- **Customers…**
  - Up to Mar 10 : 396 Nos.
  - Up to Feb 10 : 388 Nos.
- **Performance Mar'10 …**
  - Turnover growth : 70.41 %
  - Employment growth : -4.00%
  - 100% Attendance : 36.84%

## MANAGEMENT

- **Managing Director**
  - Mr. Velappan Jeyakummar
- **Board of Directors**
  - Ms. P.E. Nancy
  - Ms. S. Vanajambika

## KEY PERSONS

| | |
|---|---|
| Mr. T. Amala Dhass | : Plating. |
| Mr. T. Ramesh | : Production. |
| Mr. N. Murugan | : Projects. |
| Mr. A. Rathinam | : Design. |
| Mr. M. Suyambu | : Stores. |
| Mr. RM. Ravichandran | : Marketing. |
| Mr. S. Siva Kumar | : Marketing. |
| Mr. C. Babu | : Finance. |
| Mr. R. Ramesh | : QA. |
| Mr. C. Sounder Suresh | : Purchase. |
| Mr. K. Manivannan | : Production–FRP |
| Mr. G.Balachandran | : R&D. |

## ACHIEVEMENT




## வயிறு ஒன்று கைகள் இரண்டு

ஒவ்வொரு மனிதனின் விதியும் அவன் கையில் தான் உள்ளது. அடுத்தவர்கள் நம்மை விடுவிக்க வேண்டும் என்றோ, நாம் கட்டுப்பட்டிருக்கின்றோம் என்றோ எண்ணுதல் கூடாது. நீங்கள் எந்த இடத்தில் இருக்கின்றீர்களோ அங்கிருந்தபடியே உங்கள் சுதந்திரத்திற்காக முழுமையான முயற்சிகளை மேற்கொள்ளுங்கள், அதற்கு இறைவனின் துணையைக் கைக்கொள்ளுங்கள்.

கடந்த கால வினைப்பயனால் துன்பங்கள் வந்தாலும் தாங்கிக் கொள்ளுங்கள். இறையருளை நாடி பிரார்த்தனையை மேற் கொண்டால் துன்பங்களை முழுமையாக போக்கிக் கொள்ளவோ அல்லது குறைத்துக் கொள்ளவோ இயலும். நிகழ்காலம் மட்டும் நம் கண்களுக்குத் தெரிகிறது. இதே நிகழ்காலம் தான் எதிர் வருகின்ற நாளைய வாழ்கையையும் தீர்மானிக்கின்றது. அதனால் சரியான வாழ்க்கை முறையைத் தேர்ந்தெடுத்து யாவருக்கும் பயனுள்ள மனிதராக வாழுங்கள்.

எந்தவொரு மனிதனும் பட்டினி இருக்க வேண்டிய அவசியமில்லை. கடவுள் ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு வயிற்றைத் தான் கொடுத்திருக்கின்றார். ஆனால், உழைப்பதற்கென்று இரண்டு கைகளைத் தந்திருக்கின்றார். அதனால், இரண்டு கைகளாலும் உழைக்கும் எண்ணம் கொண்ட மனிதர்கள் யாவரும் வயிறார உண்டு வாழலாம். உழைப்பு மனிதனின் தாரக மந்திரமாக இருக்கட்டும்.

தொகுத்தளித்தவர்

Ms. P.E. நான்சி
Director – Admin.

## Priceless Precious

Time is the strongest force of nature that surely rules both **nature and human kind**. Time has 3 important impressions of its nature, Past, Present, and Future. It rules past that's Why we call it HISTORY. It rules present and we call it DEVELOPMENT and It's always prepared to rule future, so call it VISION.

Every person has different ways to RELATE AND VALUE TIME. We often forget to understand its importance. Some power packed words defining time and Its control on our lives is PERFECT to REMIND us constantly, What a beautiful GIFT, life has given to us, in the form of TIME. Some great quotations or words of expressions are just the reflections of our state of mind, that how we feel and relate with life. To make us understand THE VALUE and POWER OF TIME. Remember, "LOST TIME IS NEVER FOUND AGAIN." TIME IS PRECIOUS AND FREE, BUT IT'S PRICELESS. You can't own it but you can use it. You can't keep it, but you can spend it. Once you've lost it you will never get it back.

By
Mr. Alagesan.
B/O .Mrs.C.Bavani

## FUNCTIONAL WISHES



தொழிலாளர் தினம்

May 01

**Best Wishes from Tiaano Employees.**

## EXTERNAL SUPPORT

| | |
|---|---|
| Banking | : M/s. UCO Bank |
| Auditing | : M/s. Nisar & Kumar |
| AQ Auditing | : M/s. Juran Quality |
| Legal Advisers | : Lr. M.K. Govindan |
| | : Lr. Vincent |
| Central Excise | : Mr. Raghavan |
| Health Care | : M/s. Bethesda Hospital |
| | M/s. Jeya Clinic |

## BIRTH DAY WISHES

எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே!

அவர் நல்லவராவதும் தீயவராவதும்அன்னை வளர்ப்பினிலே!



| | |
|---|---|
| **Mr. T.Stephen** - Production | May 02 |
| **Ms. T. Jegatheeshwari** Sis/o Mr. T.Jegan | May 02 |
| **Mr. Y. Merlin Ebby** – Production | May 03 |
| **Mr. T. Ratish** – B/o Ms. T. Sobi | May 04 |
| **Mr. M. Jegatheesh**-Production | May 04 |
| **Mrs. C. Bavani** - Admin | May 04 |
| **Mr. D. Rajkumar**-Production | May 05 |
| **Mr. S. Dhilip Kumar** - Production | May 05 |
| **Ms. Sujitha Jenifier**- D/o Ms. T. Jeyalatha | May 09 |
| **Mr. S. Chinnathangam**-Coating | May 10 |
| **Mr. T. Rajasingh** - Fibtec | May 10 |
| **Mr. S. Lingadurai** - Projects | May 13 |
| **Mr. J. Jayasekar** H/o Ms.Kalaiselvi- Sores | May 13 |
| **Mr. T. Jesudhas** - H/o Ms.T.Jayalatha | May 14 |
| **Ms. J. Nivedha Jenifer** D/o Ms.T.Jayalatha | May 14 |
| **Mrs. A. Vasugi** - M/o Mr.A.Mohan | May 15 |
| **Mr. L. Marimuthu**-Fibtec | May 15 |
| **Baby B.Emisha** –D/o Mr. C. Babu | May 16 |
| **Baby B,Vinisha** – D/o Mr. C. Babu | May 18 |
| **Master SV Ruban Jeyakumar**- S/o Mr. Sounder Suresh | May 18 |
| **Mr. P. Porselvan** - Maintenance | May 20 |
| **Mr. S. Kalidasan** - Outsourcing | May 20 |
| **Mr. K. Saravanan** - Production | May 20 |
| **Mr. T. Amaladhas** - Coating | May 21 |
| **Mr. T. Dinesh** - Production | May 21 |
| **Baby Stephanie Helena** D/o Mr. T.StephenPrabakar | May 21 |
| **Mr.R. Vaidyanathan** H/oMs.Indumathi | May 22 |
| **Mrs. S. Mangalam** W/o Mr. K.Sureshkumar | May 25 |
| **Mr. N. Murugan** - Projects | May 26 |
| **Mr. M. Ranjith**- Marketing | May 26 |
| **Mr. T.S. Venkatachalam** H/o Ms.Shaila Venkat | May 28 |
| **Ms. R. Merlin sheeba** M/o Mr.Joshpher Kingston | May 29 |
| **Mr. M. Ramesh** – Production | May 31 |

**Best Wishes by Tiaano Employees**

## கான்∴பிடன்ஸ் கார்னர்

ஒரு கப்பல் கவிழ்ந்தது. சிரமப்பட்டு நீந்தி ஒரு தீவுக்குள் சேர்ந்தான் அந்த மனிதன். ஆளரவமற்ற தீவு அது. தாவரங்களை உண்டான். தட்டுத் தடுமாறி ஒரு குடிசையைக் கட்டிக் கொண்டான். சிக்கி முக்கிக் கற்களை உரசி நெருப்பை உண்டாக்கி சமையல் செய்தான்.

கடவுளுக்குத் தன் மேல் கொஞ்சமாவது கருணை இருக்கிறதே என்று கருதிக் கொண்டே காய் கனிகள் பறிக்கச் சென்றவன் திரும்பி வந்து பார்த்த போது அவன் குடிசை பற்றி எரிந்து கொண்டிருந்தது.

ஙீகடவுளே! உனக்குக் கருணையே இல்லையா! அல்லது நீயே இல்லையா?ò என்று கதறினான். சிறிது நேரத்தில் அவனைக் காப்பாற்ற ஒரு கப்பல் வந்தது. ஆச்சரியம் அவனுக்கு! ஙீநான் இங்கே இருப்பது எப்படித் தெரியும் ?ò என்றான்.

ஙீதீவிலிருந்து புகை எழுந்ததை வைத்து யாரோ இருக்கிறார்கள் என்று புரிந்து கொண்டோம்ò, என்றார் கப்பலின் தலைவர்.

**“சோதனைகள் பெரும்பாலும் நம்மைக்காப்பாற்றுவதற்காகவே ஏற்படுகின்றன.”**

கான்பிடன்ஸ் கார்னர் என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்டது

## உறவுகள் மேம்பட

- எல்லோரிடத்திலும் எல்லா விஷயங்களையும், அவர்களுக்குச் சம்பந்தம் உண்டோ, இல்லையோ சொல்லிக் கொண்டிருக்காதீர்கள்.
- மற்றவர் கருத்துக்களில், செயல்களில் நடக்கின்ற நிகழ்ச்சிகளைத் தவறாக புரிந்து கொள்ளாதீர்கள்.
- மற்றவர்களுக்குரிய மரியாதையைக் காட்டவும், இனிய, இதமான சொற்களைப் பயன்படுத்தவும் தவறாதீர்கள்.
- பேச்சிலும், நடத்தையிலும், பண்பில்லாத வார்த்தைகளையும், தேவையில்லாத மிடுக்கையும் காட்டுவதைத் தவிர்த்து அடக்கத்தையும் பண்பையும் காட்டுங்கள்.
- பிரச்சனைகள் ஏற்படும் போது, அடுத்தவர் முதலில் இறங்கி வர வேண்டும் என்று காத்திருக்காமல் நீங்களே பேச்சைத் துவங்க முன் வாருங்கள்.

தொகுத்தளித்தவர்

திருS V .கண்ணபிரான் – Marketing

## இணைந்து பணியாற்றுவதால் வருகிற நன்மைகள்

1. பணியிடத்தில் சந்தோஷம் நிலவும்.
2. 1 + 1 = 3 ஆக மாறும்.
3. கருத்து பரிமாற்றம் சரியாக நிகழும்
4. கலந்து ஆலோசித்து செய்வதால் புதுப்புது வெற்றி வழிமுறைகள் உருவாகும். பணி எளிதாகவும் தரமானதாகவும், விரைவாகவும் முடியும்.
5. விட்டுக் கொடுக்கின்ற மனப்பான்மை உருவாகி ஒருவருக்கொருவர் உதவி செய்து பணி முழுமையாக நிறைவேறும்..
6. பணியிடத்தில் ஒவ்வொரும் ஓர் அங்கம் தான். அனைவரும் இணைந்தால் வெற்றி நிச்சயம்.

தொகுத்தளித்தவர்

திரு. R. ஆனந்த் – Marketing

இணைந்து பணியாற்றுவோம் !!

வெற்றி பெறுவோம்!!!

## தெரிந்து கொள்வோம்

### வெள்ளரிக்காயின் மகத்துவம்

- வெள்ளரிக்காயில் நம் உடம்பிற்கு தேவையான வைட்டமின் B1,B2,B3,B5,B6,C, போலிக் – அமிலம், கால்சியம், இரும்பு, பாஸ்வரம், பொட்டாசியம், ஜிங்க் போன்றவை உள்ளன.
- மதிய நேரத்தில் சோர்வாக உள்ளீர்களா? வெள்ளரிக்காயை சாப்பிடவும். கார்போஹைடிரேட், D வைட்டமின்கள் உள்ளதால் சோர்வை வேகமாக விரட்டும்..
- களைப்பு மற்றும் தலைவலியா? வெள்ளரிக்காயை சிறு துண்டுகளாக்கி படுக்கைக்கு செல்லும் முன் சாப்பிடவும், களைப்பு மற்றும் தலைவலி பறந்து விடும்.

### கோலமும் அதன் பலன்களும்

வாசலில் விடியற்காலையில் கோலம் போடுவதால் போடுவோருக்கு தூய்மையான காற்று உட்கொள்ளப்படும். அது மனதிற்கும், உடலுக்கும் புத்துணர்வைத் தரும். குனிந்தே கோலம் போட வேண்டும் என்ற நம்பிக்கை காரணமாக உடலுக்கு நல்ல உடற்பயிற்சியாகக் கோலம் அமைகிறது.

கோலமிடுவதால் கணக்கியல் அறிவு பெருகும். தொடங்கிய இடத்திலிருந்து சுற்றி வளைத்து, நெளித்து, சுழித்து, இறுதியாக முடிக்கும் இடம் வரை கவனித்து ஒருமித்துக் கோலம் இடுவதால் ஒழுங்குணர்வு ஏற்படும்.

கோலம் இட்டால் சிக்கல் தீர்ந்து முடிவு அறியும் திறன் வளரும். கை விரல்களுக்கு நல்ல பயிற்சி கிடைக்கும். கற்பனை திறன் வளரும்.
இன்றைய கணிப்பொறி வளர்ச்சியின் தொடக்கக் கூறாகக் கோலம் அமைந்துள்ளது எனலாம்.

### சிந்தனைத் துளிகள்

- நேரத்தை அறிந்தே வீணாக்குபவன் வாழ்க்கையின் அருமையை உணராதவன்.
- எந்த வேலையையும் தன் விருப்பத்திற்கு ஏற்றதாக மாற்றுபவன் எவனோ, அவனே அறிவாளி.
- நற்பண்புகளுக்கு எல்லா இடங்களிலும் வரவேற்புண்டு.
- பிறர் தவறுகளை கண்டு தன் தவறுகளைத் திருத்திக் கொள்பவன் புத்திசாலி.
- நம்பிக்கை தான் வாழ்க்கை.

தொகுத்தளித்தவர்
C. Bavani – Admin.

### வாழ்க்கையே உங்களுக்கு உதவும்

வாழ்க்கை விந்தையானது, விசித்திரமானது. வாழ்வில் நீங்கள் என்ன செய்ய விரும்புகிறீர்கள் என்பது உங்களுக்குத் தெளிவாக புரிந்தவுடன் பல நிகழ்வுகள் இயற்கையாக நிகழ்கின்றன. வாழ்க்கையே உங்களுக்கு உதவுகிறது. ஒரு நண்பனோ, உங்களுடைய உறவினரோ, உங்களுடைய பாட்டியோ, உங்களுடைய ஆசிரியரோ அல்லது யாரோ ஒருவர் உங்களுக்கு உதவி செய்கிறார்.
ஆனால், உங்களுடைய தந்தை, உங்களை வீட்டிலிருந்து வெளியேற்றிவிடுவார் என்ற அச்சத்தினால் நீங்கள் விரும்புவதை செய்யவே அஞ்சினால், உங்கள் வாழ்வே அர்த்தமற்றதாகிவிடும். நீங்களே காணாமல் போய் விடுவீர்கள். அச்சத்தினால் ஏதோ ஒரு வற்புறுத்தலுக்கு ஒருவர் கீழ்படிந்தால் அவருக்கு வாழ்க்கை உதவுவதில்லை. இதைத்தான் நான் செய்ய விரும்புகிறேன் என்று கூறி தெளிவுடன் நீங்கள் விரும்புவதைச் செய்தால் அற்புதமான ஆச்சரியமான நிகழ்வுகள் உங்கள் வாழ்வில் நடப்பதை நீங்கள் காண்பீர்கள்.
நீங்கள் விரும்புவதைச் செய்வதால் நீங்கள் பட்டினியில் வாடலாம். உங்கள் வாழ்க்கை நடத்துவதற்கே நீங்கள் போராட வேண்டியிருக்கலாம். ஆனால் நீங்கள் மற்றவர்களைப் போல் வெறும் நகலாக இல்லாமல் ஒரு சிறந்த மனிதராகத் திகழ்வீர்கள். இவ்வாறு வாழ்வதே அற்புதமாகும். ஆனால், அவ்வாறு தனித்து நின்றால் ஏதோ ஒன்று, யாரோ ஒருவர் உங்களுக்கு உதவுகிறார் என்பதை நீங்களே காண்பீர்கள்.

Prepared By
Mr. G.BALACHANDRAN – R&D.

### வெற்றியின் ரகசியம்

கனவுகள் நினைவாகé நினைத்தவை எல்லாம் நிஜமாகé கண்ணுக்குள் கண்ட கனவு கண் முன் நடக்க 10 யோசனைகள் :

தன்னம்பிக்கை

10 வழி முறைகளில் எத்தனை வழிகளை நீங்கள் கையாள முடியும் என்று நினைக்கின்றீர்கள்? அனைத்துமா? ஆம் இது தான் முதல் வழிமுறை. வெற்றி பெற தன்னம்பிக்கை தேவை. அனைத்தையும் செய்ய இயலும் என்ற தன்னம்பிக்கை. நம்பிக்கையற்றவர்களையும், அவநம்பிக்கையையும் தவிருங்கள். வெற்றி உங்கள் பக்கத்தில் வரும்.

இலட்சியம்

உங்கள் லட்சியத்தை அல்லது நீங்கள் அடைய விரும்பும் ஒன்றை தேர்வு செய்து கொள்ளுங்கள். ஏனெனில் ஏதாவது ஒன்றை சாதிக்க வேண்டுமெனில் அது என்ன என்பதை முதலில் தீர்மானித்துக் கொள்ள வேண்டும்.

முயற்சி

நீங்கள் என்னவாக விரும்பினீர்களோ அதற்கான அனைத்து முயற்சிகளையும் செய்யுங்கள். எதை நினைத்தும், பயந்தும் முயற்சியில் இருந்து பின் வாங்காதீர்கள். முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார்.

கற்றுக் கொள்ளுங்கள்

படியுங்கள், கற்றுக் கொள்ளுங்கள், எப்போதும் எதையாவது கற்றுக் கொண்டே இருங்கள். புதிது புதிதாக எதையாவது அறிந்து கொண்டே இருங்கள். உங்களுக்கு எதில் விருப்பமோ அதைப் பற்றி அதிகமாக அறிந்து கொள்ள முன் வாருங்கள். கற்றுக் கொள்வதை எப்போதும் நிறுத்த வேண்டாம்.

தொடரும்é é é .

## கவிதைகள்

### மனதின் உறுதி

முடியாது என்பது முயலாத வரைé .
இயலாது என்பது é .
இல்லை என்றாகும் வரை!
முடியும் எனச் சொல்லிப் பார்
சாதிப்பேன் என உறுதி கொள்!
உன் நம்பிக்கையே
தைரியத்திற்கு பாதை அமைக்கும்
தைரியமோé மனதிற்கு
உறுதியை தந்து வைக்கும்!
உறுதியான சிந்தனை
உலகத்தை வளைத்து வைக்கும்
உலகத்தின் சுழற்சியும்
உனக்காக மாறி நிற்கும்!

### இலக்கு

இலக்கை அடைய இஷ்டப்படு
அதற்காக நாளும் கஷ்டப்படு
தடைகள் வந்தால் தகர்த்திடு
எதிர்ப்புகள் வந்தால் எதிர்த்திடு
நீதிநெறி கொண்டு உழைத்திடு
வெற்றியை நோக்கி உயர்ந்திடு
தோல்வியை தோற்கடி.
உயர்வு உண்மைக் கல்வெட்டு
பொய்யானால் நீர் மேல் எழுத்து

Prepared By'
Mr. C.Abilash ï Faciliation

## Inspiring Quotes on Positive Thinking

1. The difference between can and can-not are only three letters. These three letters determine your life's direction.
2. A positive attitude brings strength, energy and initiative.
3. Positive thoughts are not enough. There have to be positive feelings and positive actions.
4. The power of positive thinking is like a car with a powerful engine that can take you to the summit of a mountain.
5. A positive attitude brings strength, energy and initiative.

பணியாளர்கள் மற்றும் பணியாளர்களின் குடும்பத்தாரிடமிருந்து கவிதைகள், கட்டுரைகள், கதைகள் வரவேற்கப்படுகிறது.
– **Editor**

## ஒரு மகிழ்ச்சியான அறிவிப்பு

இந்த ஆண்டு (2010 – 2011) நமது நிறுவனத்தில் நடைபெற உள்ள 8ம் ஆண்டு அலுவலர் தின விழாவினை ஒட்டி ஒரு புதிய முயற்சியை நமது நிர்வாகம் மேற்கொள்ள இருக்கிறது. அதாவது, நமது அலுவலர் தம் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் யாதேனும் ஒரு துறையில் தனித் திறன் பெற்றிருந்தால், அதனை வெளிக்கொணரும் வகையில் இந்நிகழ்ச்சி அமைந்திருக்கும்.




உதாரணமாக, நமது சக அலுவலர் திரு. முனுசாமி (FIBTEC), அவர்களின் புதல்வர் திரு. செந்தமிழ்ச்செல்வன், சென்ற வருடம் கண் பரிசோதனை முகாம் நடத்தினார். அது போல, கைவினைப்பொருட்கள் தயாரித்தல் போன்ற தனித்திறன் உள்ள நமது குடும்ப உறுப்பினர்கள், தங்களின் அனுபவங்களை, தயாரிக்கும் முறைகளை, பகிர்ந்து கொள்ளவும், தயாரித்த பொருட்களை விற்பனை செய்யவும், வழி வகை செய்ய சிறிய அளவிலான ஸ்டால்களை நிர்வாகம் இலவசமாக அமைத்துத் தர இருக்கிறது.

திறமையும், விருப்பமும் உள்ளவர்கள், தங்களின் முழு விவரங்களுடன் திருமதி. ஷைலாவெங்கட் (கஸ்டமர் கேர்) அவர்களை அணுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

நிர்வாகம்.

## CHLOR ALKALI ELECTROLYZER

